Date: 30.03.22 C.C.No. 106/2020

அ.சா.1 ராதிகா மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

இதே சம்பவம் தொடர்பாக சிலைமான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் சரிதான். அந்த வழக்கின் குற்ற எண். 189-19 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் குற்ற எண் நினைவில் இல்லை. எதிரியும் என்மீது சிலைமான் காவல் நிலையத்தில் குற்ற எண்.210-19 ஆக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், நான் ரத்துசெய்யக்கோரி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அதில் இடைக்கால பரிகாரம் எதுவும் எனக்கு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். நான் வாழ்க்கை பொருளுதவி கோரி மாண்புமிகு கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எம்.சி.21-19 என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். அந்த வழக்கில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிதரப்பில் எதிரியையும் அவரது சகோதரி வளர்மதியையும் விசாரித்துள்ளனர் என்றால் சரிதான். 3-வது சார்பு நீதிமன்றம் மதுரையில் எதிரி விவாகரத்து கோரி எச்.எம்.ஓ.பி.199-19 என்று தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2016ம் ஆண்டு கருப்பாயூரணி காவல் நிலையத்தில் குற்ற எண். 481-16 என்ற வழக்கு எதிரி என்மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான், அது ரத்தாகிவிட்டது. ரத்தாகிவிட்டது என்று எப்படி சொல்கிறேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து பேசி முடித்தாகிவிட்டது என்று சொல்கிறேன். அது சம்மந்தமாக நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கு சம்மந்தமாக கருப்பாயூரணி காவல் நிலையத்தில் விசாரணை நடந்ததா என்றால் நடந்தது. அந்த விசாரணைக்காக என்னை திருப்பூரிலிருந்து என்னை இரண்டு காவலர்கள் கருப்பாயூரணி காவல் நிலையம் அழைத்து வந்தனர் என்றால் சரிதான். திருப்பூர் காவலர்கள் அழைத்ததன்பேரில் கருப்பாயூரணி காவல் நிலையத்திலிருந்து இரண்டு காவலர்கள் என்னை அழைத்து வந்தனர். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மூத்த அண்ணன். பாண்டியராஜன், இளையவர் மணிகண்டன். மூத்த அண்ணன் மதுரை அண்ணா நகரில் உள்ள கண்ணன் பூக்கடையில் வேலை பார்த்தார் என்றால் முந்தி வேலை பார்த்தா, தற்போது மாட்டுத்தாவணியில் பூ கடை வைத்துள்ளார். திருப்பூரிலிருந்து வந்த பின்பு கருப்பாயூரணி காவல் நிலைய விசாரணைக்கு பிறகு மேற்படி கண்ணன் என்பவர் வீட்டிலிருந்தேன் என்றால்

ஒருநாள் காலையிலிருந்து மாலைவரை இருந்தேன். தொடர்ந்து நான் அங்குதான் இருந்தேன் என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. திருப்பூரிலிருந்து என்னை அழைத்து வரும்போது எதிரியும் என் அண்ணன் பாண்டியராஜனும் உடன் வந்தனர் என்றால் சரிதான். கருப்பாயூரணி காவல் நிலைய விசாரணைக்கு என் அம்மாவும் வந்திருந்தார் என்றால் சரிதான். நானும் எதிரியுடன் மலேசியா சென்றுள்ளேனா என்றால் முதல் குழந்தை பிறக்கும் முன்பு சென்றிருந்தேன். என்னிடம் காட்டப்படுவது என்னுடைய கடவு சீட்டு என்றால் சரிதான். அந்த கடவு சீட்டின் நகல் எ.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படுவது என்னுடைய மூத்த மகளின் கடவு சீட்டு என்றால் சரிதான். அந்த கடவு சீட்டின் நகல் எ.சா.ஆ.2 ஆகும். என்னிடம் காட்டப்படுவது என்னுடைய 2-வது மகளின் கடவு சீட்டு என்றால் சரிதான். அந்த கடவு சீட்டின் நகல் எ.சா.ஆ.3 ஆகும். என்னிடம் காட்டப்படுவது என்னுடைய 2அம்மாவின் கடவு சீட்டு என்றால் சரிதான். அந்த கடவு சீட்டின் நகல் எ.சா.ஆ.4 ஆகும். என்னிடம் காட்டப்படும் கடவுச்சீட்டு எதிரியின் கடவுச்சீட்டு என்றால் சரிதான். அந்த கடவுச்சீட்டின் நகல் எ.சா.ஆ.5 ஆகும். இந்த வழக்கின் புகார் மனு எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 14.02.19ம் தேதி. அந்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை 27.02.19ம் தேதி பதியப்பட்டது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாருக்கு மனு ரசீது பெற்றுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எதிரியின் கடவுச்சீட்டில் எதிரி மலேசியாவிலிருந்து 18.02.19ம் தேதி அன்று மலேசியாவிலிருந்து நாடு திரும்பியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி இந்தியா திரும்புவது தெரிந்துதான் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை, நான் காவல் நிலையத்திலிருந்து புகார் கொடுத்த பின்புதான் நாடு திரும்பினார். நான் இவ்வாறு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், எனக்கு அவர் வருவது தெரிந்துதான் புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. நான் புகார் கொடுத்த தேதியில் எதிரி இந்தியாவில் இல்லை என்றாலும், அதனால் நான் சொல்வதுபோல் சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள வீட்டைபொறுத்த விசயத்திற்கு நான் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் வீடு மாற்றத்தைபொறுத்து தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் 2001ல் திருமணம் முடிந்த பின்பு எதிரிதான் என் பெயரில் இடம வாங்கினார் என்றால் சரியல்ல. பின்பு எதிரி அந்த இடத்தில் வீடு கட்டுவதற்கு லோன் எடுப்பதற்காக நான் அந்த இடத்தை எதிரியின் பெயருக்கு எழுதிக்கொடுத்துவிட்டேன் என்றால்

சரியல்ல. மேற்படி இடத்தை எதிரி ரெப்கோ வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. எதிரியின் சகோதரி வளர்மதியின் மகன் பெயர் சந்தோஷ்குமார் என்றால் சரிதான். மேற்படி வளர்மதி நான் தாக்கல் செய்திருந்த வாழ்க்கை பொருளுதவி கோரி தாக்கல் செய்திருந்த வழக்கில் நான் அவரது மகன் சந்தோஷ்குமாருடன் திருப்பூரில் அவருடன் தகாத உறவில் இருந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் திருப்பூரில் இருந்ததாக சொல்லவில்லை. போலீசாரிடம் கொடுத்த புகாரிலோ, வாக்குமூலத்திலோ எதிரி 2-வது திருமணம் செய்துள்ளார் என்று சொல்லவில்லை என்றால் புகார் கொடுத்தபொழுது எதிரி 2-வது திருமணம் செய்தய விவரம் தெரியாது. அதன்பின்பு தெரிந்தபொழுது காவல் நிலையத்தில் சொன்னேன் ஆனால் அதனை அவர்கள் கேட்கவில்லை. எதிரி 2-வது திருமணம் செய்திருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல, அது உண்மைதான். நான் வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2019ல் கொடுத்த புகாரில் ஏற்கனவே காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரித்த விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அதுபற்றி நினைவில் இல்லை. எதிரி வெளியூரில் இருந்த காலகட்டத்தில் நான் சந்தோஷ்குமாருடன் தகாத உறவில் திருப்பூரில் இருந்தேன் என்றாலும், நான் தற்போது அது இல்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இன்றையதினம் என் மூத்த சகோதரன் அவரது பிள்ளைகளுக்கு பாண்டிக்கோவிலில் காதணிவிழா வைத்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய தவறான நடத்தையின் காரணமாகத்தான் என்னை அந்த விழாவிற்கு அழைக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள ஜீவனாம்சம் பரிகாரம், சொத்து மீட்பு பரிகாரம் ஆகியவைகள் உரிமையியல் நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்யமுடியும் என்றால் சரியல்ல.

Date: 30.03.22 C.C.No. 106/2020

அ.சா.2 அம்மாபொன்னு மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

எதிரிக்கும் என் மகள் அ.சா.1க்கும் 2 பெண் குழந்தைகள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் லக்சனா, பிரதிக்ஷா என்றால் சரிதான். கருப்பாயூரணி காவல் நிலைய விசாரணைக்கு நான் சென்றிருந்தேன் என்றால் சரிதான். கருப்பாயூரணி காவல் நிலைய விசாரணைக்காக என் மகள் திருப்பூரிலிருந்து அழைத்து வந்தனர் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் மூத்த பேத்தி லக்சனா, எதிரி நானும் சிலைமனர் சத்யா நகரில் இருந்தோம் என்றால் சரிதான். 6 மாதம் இருந்தோம். எதிரி என் பேத்தியை கொடுமை செய்ததால் நான் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டேன். எதிரி அமுதா என்ற பெண்ணுடன் தொடர்பில் இருந்த விவரத்தை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Date: 30.03.22 C.C.No. 106/2020

அ.சா.3 முனியம்மாள் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

இந்த வழக்கு சம்மந்தமாக எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனரா என்றால் விசாரித்தனர். எதிரிக்கும் புகார்தாருக்கு நடந்த இல்லற விசயம்பற்றி எனக்கு தெரியாது என்றாலும், நான் சாட்சியம் அளிக்க தகுதியில்லாத சாட்சி என்றால் சரியல்ல, எனக்கு தெரியும் அடுத்த தெருவில்தான் சம்பவம் நடந்தது. கருப்பாயூரணி காவல் நிலையத்தில் ராதிகாவை திருப்பூரிலிருந்து விசாரணைக்காக அழைத்து வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கும் புகார்தாருக்கு இடையே நடந்த சம்பவங்கள் எதுவும் தெரியாது, நான் சாட்சி சொல்ல அழைத்து வரப்பட்டேன் என்றால் சரியல்ல.